1975 அக்டோபர் 31]

கொள்ளவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் இந்தப் பயிற்சித் திட்டத்தை நாம் செயல்படுத்தவே இல்லை. இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் நடத்தலாம் என்று இருக்கிறோம்.

கோதைமங்கலம் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

* 165 **வினா—புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள கோதை மங்கலம் கிராம அரிசன மக்கள் வீட்டுமனைகள் கேட்டு அண்மையில் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி வட்டத்தைச் சேர்ந்த கோதைமங்கலம் கிராமத்தில் 21 வீடில்லாத ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 1.22 ஏக்கர் நிலத்தை மந்தை புறம்போக்கிலிருந்து நத்தமாக மாற்றியபின், அரிசனங் களுக்கு வீட்டுமனை பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துவருவதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கோதைமங்கலம் கிராமத்திலிருக்கிற அரிசன மக்களிடத்திலிருந்து அரசுக்கு எப்பொழுது ரெப்ரசன்டேஷன் வந்தது ? எப்பொழுது இந்த மந்தைப் புறம்போக்கு நத்தைப் புறம்போக்காக மாற்றப் படும் ? அவைகளைத் துரிதமாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 1973-74-ம் ஆண்டு அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறிப்புப்படி இப்பொழுது எடுத்துக் கொடுத்து விடுவார்கள் என்று தெரிகிறது, கொடுத்து விடுவார்கள் என்றும் நம்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரிசனங் களுக்கு வீட்டு மனையைக் கையகப்படுத்துவதற்காகத் தற்பொழுது பின்பற்றப்படும் விதிமுறையினால் நீண்டகாலம் தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைப் பற்றிக் கேட்கிறார். புறம்போக்கு நிலங்களாக இருந்தால், அரிசனங்கள், ஏழை மக்கள் இருக்கிற நிலத்தை, உடனடியாக ரெவினியூ அதிகாரிகள் ஜாரி செய்து கொடுத்துவிடுகிறார்கள். அதுவும் தேவைப்படுகிற நிலம், நியாயமான நிலமாக இருந்தால், கையகப்படுத்தும்பொழுது, ஒரு வருடைய நிலத்தை எடுத்துக் கொடுப்பதில் என்ன சிரமம் இருக்கிறது என்பது வழக்கறிஞருக்குத் தெரியும்—இவ்வளவு நாளாக நிலைமை என்ன என்று தெரியும். ஆனால், அரசாங்கம் இந்தத் தடைகளிலும் எவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்கத்தான் முயற்சி செய்கிறது, இப்பொழுது நிலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேகமாகக் கொடுக்க அரசு உத்தரவுகளைத் திருத்த வேண்டும். அதனை, வேண்டுமென்றால் அரசாங்கம் கவனிக்கும்.

திரு. எஸ். வடிவேல் : அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு முன் வந்திருக்கிறது. கடந்த 4 ஆண்டுகாலமாக என்னுடைய தொகுதியில் பல இடங்களைச் சொல்லியாகிவிட்டது. ஆனால், ஒரு வீடு கூடக்கட்டவில்லை. போன தடவை முதலமைச்சரவர்கள், உங்களுடைய இடத்தைச் சொல்லுங்கள், ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். இன்றையதினம் ஒரு காலனி கூட என்னுடைய தொகுதியில் ஏற்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, மனை ஒதுக்க வேண்டுமென்பது கேள்வி. இப்பொழுது வீடு ஒதுக்குவதைப் பற்றி உறுப்பினர் கேள்வி கேட்கிறார். மனைகள் கொடுத்த இடத்தில், வீடு கட்டிக் கொடுக்கத் தகுதியான நிலம் எப்படி இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதோ, அப்படி இருக்குமானால், முதலிலேயே எடுத்துக் கட்டிக் கொடுத்து விடுவார்கள். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தை இன்றையதினம் கொடுத்தால், முதலமைச்சரிடம் கொடுத்து, நியாயமான இடத்தைப் பெறலாம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே ஒரு இடம் கூட தகுதியான இடம் இல்லையென்ற முடிவுக்கு வந்து விட்டாரா அமைச்சர் அவர்கள்? பல இடங்களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஒரு இடம் கூடத் தகுதியாக இல்லையென்றால் எப்படி. . .

1975 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத் தனிக் கேள்வி கேளுங்கள்.

(பதிலில்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அவையுரிமைப் பிரச்சினை.

மதம் மாறிய அரிசனங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவைக்கு உண்மைக்கு மாறான தகவலை அளித்ததாகக் கூறி கொண்டு வரப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அவையுரிமை பற்றிய தீர்மானம் ஒன்றிற்கு அறிவிக்கைக் கொடுத்திருக்கிறார்கள்.

' While presenting the Supplementary Demands for 1975–76, the Chief and Finance Minitser stated as follows on 25th October 1975 :—

" Government have decided to extend all the concessions now being granted to Scheduled Castes to Harijans already converted to Christianity as well. In respect of admissions to educational institutions and reservations in public services, Harijan converts to Christianity will be treated on par with members of the Backward Classes. At present the descendants of Harijan converts to Christianity are not eligible for the concessions. Government have decided to do away with restrictions and to extend these concessions to Christianity so as to be on par with the members of the Backward Classes."

This idea was followed by some Members who spoke on 29th October 1975.

It is contrary to truth as evident from G.O. Ms. No. 9, Social Welfare, dated 3rd January 1974 and some earlier G.Os. as well. The speech is calculated to mislead the House. Hence it amounts to breach of privilege of the House."